# தமிழ் மொழியும், சமூக உருவாக்கமும்

*ந. முருகேசபாண்டியன்*
மதுரை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து

பண்டைத்தமிழ் இலக்கணநூலான தொல்காப்பியத்திற்குப் பாயிரம் பாடிய பனம்பரனார், வடக்கே வேங்கடமும், தெற்கே குமரிக் கடலும் தமிழ் மொழி புழங்குகிற நிலவெளியின் எல்லைகளாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழிக்கு இலக்கணம் கண்டறிந்திட்ட தொல்காப்பியம் நூலின் முன்னுரையில் தமிழ் மொழி பேசப்படுகிற நிலத்தைக் குறிக்க வேண்டிய தேவையைக் கண்டறிய வேண்டியுள்ளது. மொழிக்கும் நிலத்துக்குமான தொடர்பு, மக்கள் செயல்பாடுகளில் அழுத்தமாக ஊடுருவியுள்ளது. பழங்காலத்தில் மக்கள் அன்றாட வாழ்க்கையில் இயல்பாகக் கண்ணெதிரே காண்கிற நிலப்பரப்பினைத் தமிழ் மொழி அடையாளத்துடன் பதிவாக்கியிருக்கும் செயல், அரசியல் நோக்கமுடையது. ஜைன சமயத்தவரான தொல்காப்பியர், தமிழ் மொழியை முன்வைத்து, நிலப்பரப்பினைக் குறிப்பிட்ட நிலத்தின் தன்மைக்கேற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பிரித்ததும், திணைக் கோட்பாடு வகுத்ததும், தமிழ் மொழிக்கு இலக்கணம் உருவாக்கியதும் புறத்தில் இருந்து தமிழ் பேசப்படுகிற நிலப்பரப்புக்குள் நுழைந்து, தங்கிட முயலுகிறவர்கள், தமிழை அறிந்திடுவதற்காகத்தான். தமிழ் மொழியின் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் பிறருக்குக் கற்றுக்கொடுப்பதற்காக எழுதப்பட்ட இலக்கண நூல்தான் தொல்காப்பியம். பழந்தமிழ் மொழிக்கு இலக்கணம் வரையறுக்க முயன்ற தொல்காப்பியரின் செயல்பாட்டில் நுண்ணரசியல் பொதிந்துள்ளது. தமிழ் மொழி அடையாளத்துடன் இனக்குழு அல்லது குடிகள் அல்லது கணங்கள் என வாழ்ந்த பிரிவினரைச் சமூகமயமாக்கும் பணி தொடங்கியதன் வெளிப்பாடுதான், மொழி பற்றிய பிரக்ஞை உருவாக்கம். அதேவேளையில் தொல்காப்பியம், தமிழ்ப் பெருநிலம் எதுவென வரையறுத்து, தமிழ்ச் சமூக உருவாக்கத்திற்கு வழி வகுத்தது. மொழியைப் பற்றிய புரிதலுடன் தமிழ் மொழியைத் தரப்படுத்துதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. தமிழின் கிளை மொழி, வட்டார மொழி வழக்கு போன்றவற்றைத் தொகுத்து, மொழியின் இயங்குதளத்தை விரிவுபடுத்திடும் இலக்கணக்காரரின் முயற்சியானது, தமிழ்ச், சமூக விரிவாக்கப் பின்புலமுடையது.

இனக்குழுத் தலைவன், குறுநில மன்னன், மூவேந்தர் போன்ற அரசியல் சொல்லாடல்கள், மொழியை முன்வைத்து, சமூகக் கட்டுமானத்தில் ஊடுருவி, அரசு, தமிழ்ப் பேரரசு உருவாக்கத்தில் தொல்காப்பியம் வினையாற்றியுள்ளது. நிலம், நாடாக உருமாறும் அரசியல், மொழியினால்தான் சாத்தியமாகிறது. காலப்போக்கில் தமிழ் நாடு, தமிழ்ப் பண்பாடு, தமிழர் மரபு, தமிழ்ப் பாரம்பரியம், தமிழர் வரலாறு, தமிழர் உணவு, தமிழ்க் காதல் எனப் பல்வேறு சமூகம் சார்ந்தவற்றை வடிவமைத்ததில் தமிழ் மொழியின் இடம், ஒப்பீடு அற்றது.

வெறுமனே தகவல் தொடர்புக் கருவி என்பதற்கு அப்பால், தமிழ் மொழியானது, அன்றாட வாழ்வில் ஒவ்வொரு அம்சங்களிலும் அழுத்தமாக ஊடாடுவதைக் கண்டறிய முடியும். சமூகமும் மொழியும் ஒன்றுடன் ஒன்று எதிர்வினையாற்றுகிற வல்லமையுடன் விளங்குகின்றன. மொழியானது ஒருவகையில் மனித உடலின் உறுப்புப் போன்றது; ஆறாவது புலன் போல் வினையாற்றுகிறது. மனிதன், பூமியில் வாழ்வதற்கு உடல் மட்டும் போதும்; மொழி தேவையில்லை. ஆனால் சமூக மனிதனாக வாழ்வதற்கு மொழி, அவசியமானது. ஒவ்வொரு தனிமனிதனையும் சமூகத்துடன் இணைக்கிற கண்ணியாக மொழி செயல்படுகிறது. தனிமனிதரீதியில் ஒவ்வொருவருக்குள்ளும் கொப்பளிக்கிற உணர்வுகளும், கடந்த கால நிகழ்வுகள் குறித்த மனப்பதிவுகளும் மொழியின் வழியாகத் ததும்புகின்றன. ஒருவன் அல்லது ஒருத்தி தன்னை அறிந்திடும்வேளையில், நினைவுகளின் வழியாக ஒவ்வொரு வருக்குள்ளும் பதிவாகிற தகவல்கள், முக்கியமானவை. அதேவேளையில் சகமனித உயிர்களுடன் உறவாடுவதற்கும், கருத்துப் பறிமாற்றத்திற்கும் மொழி, அடிப்படையானதாகிறது. சமூகம் உருவாக்கப்படுகிற சூழலில், மொழியின் செயல்பாடுகள், அளவற்றவை. மொழி நினைவாக இருந்து, ஒருத்தருக்குள் எதிரிணையான உணர்வுகளை உருவாக்குகிறதா? யோசிக்க வேண்டியுள்ளது. குறிப்பிட்ட நிலப்பரப்பில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வரும் மக்கள், அந்நிலத்தை முன்வைத்து மொழியால் கட்டமைக்கப்படுகிற பொது நினைவுகள், சமூகம் தோன்றுவதற்கான அடித்தளமாக விளங்குகின்றன.

மொழியின் மூலம் கட்டமைக்கப்படுகிற அரசியல், கவனத்திற்குரியது. ஒரு சமூக அமைப்பில் ஒருங்கிணைந்து வாழ்கிறவர்களின் ஒட்டு மொத்த நினைவுகளும் ஒற்றைத் திசையில் இயங்கிடும்போது, ஆதிக்கவாதிகள் பாதுகாப்பாக இருக்கின்றனர். மொழி வழியாக எதைச் சிந்திக்க வேண்டும், எதைச் சிந்திக்கக் கூடாது என்று யோசிப்பதுகூட எல்லாக் காலகட்டங்களிலும் அதிகாரத்தின் குரலாக வெளிப்படுகிறது. மொழி, பொதுப் புத்தியில் கட்டமைக்கிற சமுதாய அமைப்பிற்கு எதிரானவர்களைக் கலகக்காரர்கள், மனப்பிறழ்வாளர்கள், குற்றவாளிகள், ஓரினப் புணர்ச்சியாளர்கள், அரவாணிகள், சமூக விரோதிகள் என்று அடையாளப்படுத்தி, ஒதுக்குவதும், புறக்கணிப்பதும் திட்டமிட்ட முறையில் நடைபெறுகிறது. நிறுவனமயமான அமைப்பிற்கு ஆதரவாகவும், எதிராகவும் குரல்களை உருவாக்குகிற மொழியின் சமூக வினையானது பல்வேறு தளங்களில் அழுத்தமாகச் செயல்படுகிறது. இன்றும் கூட 24 மணி நேரமும் இடைவிடாத செய்திகளைத் தொலைக்காட்சி சேனல்கள் ஒளிபரப்புவதன் பின்னர், குறிப்பிட்ட ஆதிக்க அரசியல்வாதிகளின் அரசியல் ஆதாயம் செயற்படுவதை ஒப்பிட்டு அறிந்திட முடியும். தனிமனிதன் சுயமாகவும், அசலாகவும் மொழியினால்

சிந்தித்து, முடிவெடுப்பதற்குப் பதிலாகக் காட்சி ஊடகங்களின் புனைவு மொழிகளைத் தங்களுடைய கருத்துகள் என்று நம்ப வைக்கிற மொழி விளையாட்டு, இன்று உச்சமடைந்துள்ளது. இந்நிலைமையானது மொழியின் வழியாகத் திட்டமிட்டமுறையில் கார்ப்பரேட்டு களுக்குச் சார்பான சமூக அமைப்பைக் கட்டமைத்திட உதவுகிறது.

தமிழ்ச் சமூக அமைப்பு என்பதுகூட, ஒருவகையில் மொழியின் விளைபொருளாகும். குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழ்கிற மக்கள், அந்நிலப்பரப்பினை முன்வைத்துக் காலந்தோறும் மொழியின் வழியாகத் தகவமைக்கிற பொது நினைவுகள்தாம் சமூகம் என்ற அமைப்பு தோன்றுவதற்கான ஆதாரமாகும். சங்க காலத்தில் மன்பதை எனப்பட்ட பல குடிகளின் தொகுப்பு, காலப்போக்கில் சமுதாயம் என்று உருவெடுத்தது; பின்னர் தமிழ்ச் சமூகம் உருவானது.

தமிழ்ச் சமூகம் என்ற அமைப்பினை உருவாக்கியதில், தமிழ் மொழியின் பங்கு முக்கியமானது. பல்வேறு குடிகளாக வாழ்ந்தவர்களை ஐந்திணை நிலப் பாகுபாடுகளுக்குள் கொண்டு வருதல் என்பது, நிலத்தை மொழியின் வழியாக நினைவுக்குள் கொண்டுவருகிற அரசியல் செயல்பாடு. மனிதனைச் சமூகமயமாக்கும் செயலைச் செய்கிற தமிழ் மொழியானது, மனிதர்கள் ஒருங்கிணைந்து வாழ்வதற்குரிய உறவினைக் கட்டியமைக்கிறது. மொழி என்னும் கருவி, மனித நினைவுகளின் வழியே கடந்த காலம் என்ற வரலாற்றைச் சாத்தியப்படுத்தியுள்ளது. அது, நல்லதுX-கெட்டது, அன்புXவெறுப்பு, அறம்Xமறம் போன்ற எதிரிணைகள்மூலம் மனித இருப்பினைஉருவாக்கும்உயிரோட்டமான கருவியாக விளங்குகிறது. குழுவினராகச் சார்ந்து வாழும் இயல்புடைய மனிதர்களின் உறவுகளுக்கு அடிப்படையாக விளங்குவது, சமூகத் தொடர்புக் கருவியான மொழியாகும். இந்நிலையில் தமிழ் மொழியானது, சமூக நோக்கில் தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் முதன்மையிடம் பெறுகிறது.

தொல்காப்பியம் தொகுக்கும் தமிழ் நிலங்களில் சொல் பற்றிய விவரிப்பு, கவனத்திற்குரியது. இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வட சொல் என்ற நான்கு வகையான பாகுபாட்டில் திரி சொல், தமிழுக்குப் புறம்பானது. திசைச் சொல் என்பது பன்னிரு நாடுகளில் வழங்கப்பட்ட தமிழ்ச் சொற்கள். வட்டாரம் சார்ந்த மொழி பற்றிய பார்வையும் அனுபவமும் தமிழ் மொழி பற்றிய கருத்தியலைச் சமூகரீதியில் ஊடுருவி, பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. தமிழர்களின் மொழியை அறிதல் முறையானது, நினைவுத்தளத்தில் பொருளதிகாரம் மூலம் வேறொரு கோணத்தில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி என்னும் பெரு மொழியின் சிறப்புகள், பாணர் மரபு மூலம் எங்கும் பரவலானபோது, தமிழகம் என்ற புவியியல் சார்ந்த நிலப்பரப்பு, இன்னும் கவனம் பெற்றது. ஆற்றுப்படை நூல்களில் இடம் பெற்றிருக்கிற நான்கு நில வர்ணனை, அரசியல் அடிப்படையில் விரிந்து கொண்டிருக்கிற புதிய நிலப்பரப்பினை மொழியின் மூலம் குடிகளுக்கு அறிமுகம் செய்திடும் முயற்சியாகும். அதிகாரத் திற்கான போர்களை வீரம் என்ற அடிப்படையில் நியாயப்படுத்துதல், காதல் என்ற இயல்பான உணர்வு காரணமாகப் பெண் வேற்றுக் குடியில் இருந்து வருகிற வாலிபனை ஏற்றுக்கொள்ளச் செய்தல் எனப் புதிய சமூக மதிப்பீடுகளை

உருவாக்கிட தமிழ் மொழியானது பரந்து பட்ட நிலையில், பொதுக்கருத்தியலை உருவாக்கிட பயன்பட்டுள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சங்கப் பாடல், அதிகாரத்தினால், ஒடுக்கப்பட்டவனுக்குச் சொல்லப்பட்ட தேறுதல் மொழி என்ற மறுவாசிப்பு, மொழிக்கும் சமூக அதிகார மையத்திற்குமான உறவைச் சுட்டுகிறது.

இயற்கையையும், மனிதர்களையும் மேலாதிக்கம் செய்திட சிலர் முயன்ற போது, மனித சமூகம், அரசியல்ரீதியில் வலுவடைந்தது. சூழலைக் கண்கணிப் பிற்குள்ளாக்கியபோது, மனித உடல்களையும் ஆளுகை செலுத்தி, கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபோது, உடைமைச் சமூகம் தோன்றியது. போர், வேளாண்மை, கல்வி, வணிகம், தொழில் மூலம் சமூக இயக்கத்தில் செயல்பட்டவர்கள், சக மனிதர்களின் உடலுழைப்பைச் சுரண்டியதுடன், அவற்றை நியாயப்படுத்தும்வகையில் மொழியையும் கட்டுக்குள் கொண்டு வந்தனர். அந்தக் காலகட்டத்தில் மொழி, அதிகார மையமானது. குறிப்பாக எழுத்து மொழி பரவலானபோது, புலவர்கள் மூலம் சமூகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்தும் குரல்கள் உருவாக்கப் பட்டன.

வாய்மொழி மரபில் பல்லாண்டு களாகப் பாடப்பெற்ற பாடல்கள், பின்னர் எழுத்து வடிவில் பதிவாக்கப்பட்டன. தொல்காப்பியம், பண்டைய மரபுகளைச் சித்திரிப்பதில் பருண்மையான நோக்கம் பொதிந்துள்ளது. அது, மொழியின் அத்துமீறல்களுக்குத் தடைக்கல்லாக விளங்கிடும்வகையில் இலக்கணத்தை முன்னிறுத்துவதுடன், மேல் X கீழ் என விதிகளையும் வகுத்துத் தமிழ்ச் சமூக உருவாக்கத்தைத் திட்டமிடுவதில் முக்கிய பங்காற்றியது. ஆண், பெண் என்ற எதிரிணையைக் கட்டமைக்காமல், ஆண் புறத்தில் நிலத்தையும், அகத்தில் பெண்ணுடலையும் துய்ப்பது என்ற சொல்லாடலை விதியாக முன்மொழிதல், மேலாதிக்க அரசியல் சார்ந்தது.

மொழியினால் உருவான சொற்கள் எனக் கருதிடாமல், மொழியை முன்வைத்து மாறிவரும் சமூக அமைப்பினுக்கு ஏற்றவகையில் உடல்களைத் தயாரிக்கும் பணி, காலந்தோறும் தொடர்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிலவுகிற இயற்கையான பாலியல் உணர்வு, பாலுறவு போன்றவற்றை ஒது க்கிவிட்டு, பெண்ணை வெறுமனே உடல்களாக அணுகிடும் அரசியல், மொழியினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. பால் அடிப்படையில் உடல்களைப் பிரித்துப் பெண்ணுடல்களை இரண்டாம் நிலையினராக ஒதுக்கும் போக்கு, சங்க காலத்திலே தொடங்கிவிட்டது. தாய்வழிச் சமூகம் சிதைவடைந்து உருவான சமூக அமைப்பு நிலவிய சங்க காலத்தில் அகத் திணை இலக்கணம்மூலம் பெண்ணின் உடலும் மனமும் பற்றிய புதிய விதிகள் உருவாக்கப்பட்டன.

**தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை**
**(தொல்காப்பியம்,பொருளதிகாரம்,களவியல்:28)**

என்ற தொல்காப்பிய வரிகள், பெண் பற்றிய புதிய பிம்பத்தைக் கட்டமைக்க முயலுகின்றன. தனது பாலியல் விழைவினைப் பெண் தனது காதலனிடம்கூடச் சொல்வது கூடாது என்ற விதி, ஆண் பெண் உறவில் சமமற்ற நிலையை வலியுறுத்துகிறது. புதிய பாலியல் விதிகளை உருவாக்க வேண்டிய நிலை தொல்காப்பியருக்கு ஏற்பட்டதற்குரிய காரணங்கள் ஆய்விற்குரியன. சங்க காலத்தில் தன்னிச்சையாக இதுவரை இருந்த பெண்ணுக்கு மாற்றாகப் பெண் எதையெல்லாம் பேசக் கூடாதென இலக்கணம் வகுப்பது, மாறிவரும்

சமூகத்தில் பெண்ணின் இடத்தை மறுவரையறை செய்வதாகும்.

தாய் வழிச் சமூக அமைப்பு சிதலமாகி, அதிகாரத்திற்கு அடிப்படையாக விளங்கிடும் குடும்ப அமைப்பு உருவாக்கத்தில், பெண்ணின் செயல்பாடுகள் குறித்த விதிகளைத் தொல்காப்பியர் பதிவாக்கியுள்ளார். மனைவி என்ற நிலையில் அவள் எப்படி இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிற விதி, மேலாதிக்க அரசியல் சார்ந்தது.

**தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்**
**எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை**
***(தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல்:39)***

மனைவி தனது கணவன் முன்னால் தனது உறவினரின் பெருமைகள், தனது சிறப்புகள் குறித்துப் பேசுவது கூடவே கூடாது என்ற விதி, ஆண் மேலாதிக்க அரசியலின் வெளிப்பாடாகும். ஆண்-பெண் உறவில் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என விதிகளை வகுத்துள்ளதில், பால் சமத்துவமின்மை பொதிந்துள்ளது. பெண்ணுடல் தனது மன விழைவினைக் கணவனான ஆணிடம் சொல்வது கூடாது என்ற தடை, மாறிவரும் சமூகத்திற்கேற்றவகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் காதல் வயப்பட்டு, பின்னர் குடும்ப அமைப்பில் இணைந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நிகழ்கிற இயல்பான உரையாடலில் கட்டுப்பாடுகளை விதிக்கும் செயலில், மொழி அதிகாரமாக மாறியதை அவதானிக்க முடிகிறது.

அன்றாடம் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் சொற்களின் பின்னால் பொதிந்துள்ள பொருள்களின் அடிப்படையில் தொல்காப்பியம், சமூக அடுக்கில் நெறிமுறைகளை வகுக்க முயன்றுள்ளது.

**ஈ என் கிளவி இழிந்தோர் கூற்றே**
**தா என் கிளவி ஒப்போன் கூற்றே**
**கொடு என் கிளவி உயர்ந்தோர் கூற்றே**
***(தொல்காப்பியம்.சொல்லதிகாரம்,எச்சவியல்: 49-51)***

சொல்லின் பின்னால் புதைந்துள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளையும், மதிப்பீடுகளையும் பற்றிய தொல்காப்பியரின் விவரிப்புகள், அழுத்தமானவை. ஈ, தா, கொடு ஆகிய மூன்று சொற்களைப் பயன்படுத்துகிறவர்களை இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோர் என ஏறுவரிசையில் குறிப்பிட்டிருப்பது, மொழிப் பயன்பாட்டில் முக்கியமானது. சக மனிதர்களுடன் இயல்பாகப் பழகுகிற அன்றாட வாழ்க்கையில் மேல்Xகீழ் என வேறுபடுத்தி, யாரிடம் என்ன சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்துதல், புதிய சமூக உருவாக்கத்தின் வெளிப்பாடு.

பொதுச் சமூகத்தில் ஆண் எப்படி மொழியின் வழியாக இயங்கிட வேண்டுமென்பது விதியாகச் சங்க காலத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆடவர் ஒருபோதும் பேசிய பேச்சு அல்லது சொன்ன சொல்லில் இருந்து மாறக்கூடாது என்ற சொத்துடைமைக் காலத்து மதிப்பீடு, பெண்களின் வழியே சங்கப் பாடல்களில் நினைவூட்டப்பட்டுள்ளது.

**செறிவு எனப்படுவது கூறியது மாறாமை**
***(கலித்தொகை:138)***
**நின்ற சொல்லர்** ***(நற்றிணை:1)***

ஒருவன் சொன்ன சொல்லைக் காப்பது வாய்மை; அவ்வாறு காக்காமல் இருப்பது பொய்மை; ஊர் மன்றம், அரசவை போன்ற இடங்களில் பொய் சொல்லக்கூடாது போன்றவை மொழிக்கும் சமூகத்துக்கும் நிலவிய ஆழமான உறவைச் சுட்டுகின்றன. சங்கப்பாடல்களில்

மன்னரின் அரசு, ஆட்சி, காவல், தண்டனை போன்ற அதிகார மையங்களில் நாவின் பேச்சுச் செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டுமென்ற விதிகள், புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசன் பேசுகிற நாவின் மொழியானது, கெடு மொழியாக இருத்தல் கூடாது (அக நானூறு:352).

சமூகத்தில் மொழியின் தாக்கம் ஏற்படுத்துகிற விளைவுகள், காத்திரமானவை. ஐம்புலன்களில் முக்கியமான நாவினை அடக்குதல் குறித்த வள்ளுவரின் கருத்து, இன்றளவும் வலுப்பெற்றுள்ளது. நாக்கின் மூலம் பேசப்படுகிற சொற்களைக் கண்காணிப்பிற்குள்ளாக்கிடும் அரசியல், மாறிவரும் புதிய சமூகத்தின் அடித்தளமாகும்.

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகப்பார் சொல்லிழுக்குப் பட்டு**
**(திருக்குறள்:127)**

ஐம்புலன்களில் எதை அடக்க முடியவில்லை என்றாலும், நாவை மட்டும் அடக்க வேண்டும். இல்லாவிடில் சொற்குற்றம் ஏற்பட்டு வருத்தமடையும் நிலையேற்படும் எனத் திருவள்ளுவர் விடுக்கும் எச்சரிக்கை, மொழியைக் கையாளும் ஆற்றல் குறித்ததாகும்; சமூக ஏற்றத்தாழ்வுகளை ஏற்கும் உடல்களைத் தயாரிப்பதாகும்.

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு**
**(திருக்குறள்:139)**

தீயினால் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட வடு மறையலாம். ஆனால் தீய சொல்லால் மனதில் ஏற்பட்ட வடு, என்றும் மறையாது என்பது வள்ளுவரின் கருத்து. கோபத்தை நெருப்புக்கு உவமையாகச் சொல்லும் போது, கடுமையான சொற்களையும் தீயினால் ஏற்பட்ட தழும்பினையும் ஒப்பீட்டு, சொற்களின் விளைவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாக்கிலிருந்து வெளிப்படும் வன்சொற்களினால் எல்லாம் அழிந்துபோகும் என வள்ளுவர் எச்சரிக்கிறார். சினத்தின் விளைவான கொடுஞ்சொல்லானது உறவு, குடும்பம், நட்பு, காதல் என எல்லாவற்றையும் சுட்டெரித்து விடும். அதேவேளையில், மாறியுள்ள சமூகத்தில் ஆதிக்கவாதிகளுக்கு எதிரான மொழியாகவும் மாறக்கூடாது என்ற கருத்தும் அதில் அடங்கியுள்ளது.

வன்சொல்லுக்கு எதிராக இன்சொல் பற்றிய வள்ளுவரின் கருத்தும், விருந்தினரை உபசரிக்கும்போது இன்முகம் என்ற உடல்மொழியும், இன்சொல் மொழிதலும் கவனத்திற்குரியன. மனதுக்கு இதமளிக்கும் கனியைப் போன்ற இன்சொல்லினை வன்சொல்லுக்கு எதிர்மறையாகக் குறிப்பிடுகிற வள்ளுவர், அதைக் காய்க்கு உவமையாகச் சொல்லியுள்ளார். சக மனிதர்களுடன் தொடர்புகொள்ளப் பயன்படும் சொற்கள் பற்றிய கருத்துகள், மனிதர்களுக்கிடையிலான மேல்Xகீழ் நிலையை நியாயப்படுத்துகின்றன. சமூக உருவாக்கத்தில் மொழியின் செயல்பாடுகளைச் சித்திரிக்கின்றன.

ஒருவன் எத்தகைய சொல்லைச் சொல்ல வேண்டுமென வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க**
**சொல்லின் பயனிலாச் சொல்**
**(திருக்குறள்:200)**

ஒருவன் எப்பொழுதும் பயனுடைய சொற்களையே பேச வேண்டுமென நியதி வகுக்கப்பட்டிருப்பது,

சொல்லைச் சமூகத்தில் உயர் மட்டத்தில் வாழ்கின்றவர்களுடன் இணைக்கிறது. அதிகாரம் மூலம் ஆளுகை செலுத்து கிறவர்களின் ஏற்பினைப் பெற்றவை பயன் தரும் சொற்களாகின்றன. அவ்வாறு பயன் இல்லாதவை எனக் கருதப்படுகிற சொற்களைப் பேசுகின்றவன் மனிதன் அல்லன்; அவன் ஒரு அற்பப் பதர் என்ற நிலைப்பாட்டில், ஆதிக்க அரசியல் பொதிந்துள்ளது. இயல்பான நாவின் பேச்சினைத் தணிக்கைக்குள்ளாக்கும் நிலை என்பது புலன்களை ஒடுக்குவது மட்டுமல்ல, மொழியின் பயன்பாட்டினை வரையறுப்பதாகும்

'அவை அறிதல்' அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள குறள்களில் சமூக அடுக்கில் மேல்கீழ் பற்றிய கற்பிதம், வலியுறுத்தப்படுகிறது. கற்றவர் முன் எவ்வாறு எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்ற விவரிப்பு, ஒருவகையில் நிலவும் சமூகத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் உடல்களைத் தயாரிப்பதாகும்.

**அவை அறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்**
**வகைஅறியார் வல்லதூஉம் இல்**

**(திருக்குறள்:713)**

அவையின் தன்மையை அறியாமல் பேச முற்பட்டவர், சொற்களின் வகை அறியாதவர் ஆவர். அத்தகையவர்களால் எதையும் சாதிக்க முடியாது. நாவினால் உச்சரிக்கப்படும் சொற்களின் பயன்பாடு குறித்த விதிகள், நிலவுகிற அரசியலுக்குச் சார்பான பொதுப்புத்தியை உருவாக்கு கின்றன.

குறிப்பறிதல் அதிகாரத்தில் முகக்குறிப்பு என உடல் மொழிக்கு வள்ளுவர் முக்கியத்துவம் தந்துள்ளார்.

**குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்**

**(திருக்குறள்:705)**

முகக் குறிப்பினைக்கொண்டு எதிராளியின் உள்ளக்குறிப்பை உணரா விட்டால், ஒருவனுக்குக் கண்கள் இருந்தும் பயன் இல்லை என்ற கருத்தானது, மொழிக்கு அப்பால் உடல் மொழியும் உடைமைச் சமூகத்தில் முக்கியப் பங்காற்றுவதைச் சுட்டுகிறது.

இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமும் வரலாறும் மிக்க தமிழ் மொழி, காலந்தோறும் மாறி வருகிற அரசியல் சூழலுக்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டு, தமிழ்ச் சமூகத்தில் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. பண்டைக் காலம் முதலாகத் தமிழ் மொழியானது சம்ஸ்கிருதம், பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளுடன் தொடர்ந்து போராடிய போராட்டங்கள், வரலாறு. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் மதுரையில் ஏற்படுத்தப்பட்ட டில்லி சுல்தான்களின் ஆட்சி முதலாகத் தமிழ் மொழி, அரசின் ஆதரவை இழந்தது. அதனைத் தொடர்ந்து உருது, அரபி, தெலுங்கு, மராட்டி, பிரெஞ்ச், ஆங்கிலம் என வேற்று மொழியினரின் ஆட்சியதிகாரத்தில், தமிழ் மொழி, தன்னிருப்பைத் தக்க வைத்துக்கொள்ளப் பெரும் பாடுகள் பட்டது. அன்றைய காலகட்டத்தில் வைதிக சமயம், நாயக்க அரசின் ஆதரவுடன் செல்வாக்குடன் விளங்கியபோது, சம்ஸ்கிருத மொழி, செழித் தோங்கியது. நாயக்க மன்னர்களின் ஆட்சியின்போது, பார்ப்பனர்களின் வேதக் கல்விக்குத் தரப்பட்ட முன்னுரிமை, தமிழுக்குத் தரப்படவில்லை. அப்பொழுது தமிழ் மொழி என்பது வெறுமனே தகவல் பரிமாற்றக் கருவி அல்ல என்பதை அறிந்திருந்த சிற்றிலக்கியம் பாடிய தமிழ்ப்

புலவர்களில் பலர் தமிழை முன்வைத்து அரசியல் சொல்லாடலை உருவாக்கிட முயன்றுள்ளனர். அரசியலில் ஆதிக்கம் செலுத்திய தெலுங்கு மொழிக்கு மாற்றாகத் தமிழை முன்னிறுத்திய பேச்சுகள், குறிப்பிடத்தக்கன. சமயக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் தந்திட்ட சிற்றிலக்கியப் படைப்புகள், தமிழ் மொழியின் சிறப்பு களையும், பெருமைகளையும் விவரித் துள்ளன.

அருந்தமிழ், சங்கத்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், பசுந்தமிழ், மும்மைத்தமிழ், வண்டமிழ், துறைத்தமிழ், தெளிதமிழ் எனப் பலவாறு சைவ சமயப் புலவரான குமரகுருபரர் குறிப்பிடுவதன் பின்புலம் அடையாள அரசியலாகும். தமிழுக்குச் சரியாக யாருமில்லை, இமையோர் விருந்தமிழ்தத்தைவிட மேலானது தமிழ் எனத் தமிழின் பெருமைகளைத் தொகுத்துச் சொல்வதற்கென்று ‘தமிழ் விடு தூது’ நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ் ஆதரவற்றுப் போய் விட்டது, தமிழகத்தில் வேற்று மொழி ஆதிக்கம் பெற்று விட்டது போன்ற ஆதங்கமான குரல்கள், சிற்றிலக்கியப் படைப்புகளில் பதிவாகியுள்ளன.

சோழர்களின் ஆட்சியின்போது சமூகத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த வேளாளர்கள், நாயக்கர்களின் ஆட்சியில் பின்னுக்குத் தள்ளப்பட் டனர். தமிழகத்தை அரசாண்ட தெலுங்கினரை எதிர்ப்பது என்பது தெலுங்கு மொழி, வைணவ சமயம் ஆகிய இரண்டையும் எதிர்ப்பது என்ற சூழல் ஏற்பட்டது. அதற்காகச் சைவ சமயம், தமிழ் மொழி ஆகியன அரசியல் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ்க் கடவுள் முருகன் என்று கடவுளையும் துணைக்கு அழைத்தது, அரசியல் ரீதியில் முக்கியமான செயல்தந்திரம். இடைக்காலத்தில் சாதி, சமய வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு, தமிழ் மொழி அடிப்படையில் பொதுவான காரணத்திற்காக மக்களை ஒருங்கிணைத்து அதிகாரத்திற்கு எதிராகக் கருத்தியல்ரீதியில் போராட முயன்றது, சிற்றிலக்கியப் படைப்புகளில் பதிவாகியுள்ளன.

ஆங்கிலேயரின் காலனியாதிக்கக் கால கட்டத்தில் ஆங்கிலத்திற்குத் தரப்பட்ட முன்னுரிமை, தமிழ்மொழியின்வளர்ச்சியை இன்றளவும் பாதித்துக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் அரசாங்க அலுவல், உயர்கல்வி என எங்கும் ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்துகிற சூழலில், தமிழ் மொழியின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தமிழ் மொழியினால் கட்டமைக்கப்பட்ட சமூகத்தில், தமிழ் பயன்பாட்டிற்குரியதாக இல்லாத நிலையேற்படும்போது, மொழி இழப்பு ஏற்படும். ஒருவன் அல்லது ஒருத்தியின் பிரக்ஞையில் இருந்து, மொழி பற்றிய உணர்வை அகற்றிவிட்டால், கார்ப்பரேட்டுகளுக்குச்சாதகமானஉடல்கள் உருவாக்கப்படும் சூழல் ஏற்படும். உடலால் தமிழனாகவும், மனதால் அமெரிக்கனாகவும் வாழ்கிற நுகர்பொருள் பண்பாடு சார்ந்த வாழ்க்கை, எங்கும் பரவலாகும். அப்பொழுது தமிழ் அடையாள அரசியல் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஆங்கில மொழி, எல்லா மட்டங்களிலும் ஆதிக்கம் பெறும்.

கடந்த நாற்பதாண்டுகளாக மெட்ரிக் பள்ளிகளில் ஆங்கில வழியில் கல்வி பயின்று, சுயநிதிக் கல்லூரிகளில் பிராய்லர் சிக்கன் போல உருவாகிக்கொண்டிருக்கிற தமிழக இளைஞர்களுக்குத் தமிழ்ப் பண்பாடு, நாகரிகம், அடையாளம் குறித்து அக்கறை இருக்க வாய்ப்பில்லை. ஸ்மார்ட் அலைபேசி மூலம் கேளிக்கை, வம்பு பேசுதல், டப் மாஸ், ஆன்-லைன் மூலம் பொருட்களை வாங்குதல், ரெட்பஸ் மூலம் பதிவுசெய்து பயணித்தல், பீட்சா சாப்பிடுதல் என அமெரிக்கா

செல்கிற கனவுடன் ஜீன்ஸ் காற்சட்டை அணிந்த தமிழக இளைஞர்கள், தமிழ் மொழி பற்றிய அக்கறை இல்லாமல், வேறுவகையான உலகில் உலவிக் கொண்டிருக்கின்றனர். இன்னொருபுறம் உலகமயமாக்கலின் துணை விளைவான நுகர்பொருள் பண்பாடு, எல்லாவற்றையும் சந்தைக்கானதாக மாற்றிக்கொண்டிருக்கிற சூழலுக்குத் தமிழ் மொழியும் விதிவிலக்கு இல்லை. இத்தகைய சூழலில் ஜல்லிக் கட்டுப் போராட்டத்தை முன்வைத்து, தமிழ் மொழி சார்ந்து நடைபெற்ற அரசியல் போராட்டமும், விளைவுகளும் முக்கியமானவை.

கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு விரும்பத்தகாத செயல்பாடுகளினால் இறுகிப் போயிருந்த தமிழக இளைஞர்களின் மனங்களில், ஜல்லிக்கட்டுக்குத் தடை என்ற அறிவிப்பு, திடீரென எதிர் மனநிலையை உருவாக்கியது. ஜல்லிக்கட்டு, தமிழ் அடையாளத்துடன் தொடர்புடையது என்ற பேச்சு, எங்கும் பரவியது. தென் மாவட்டங்களில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்வுக்குத் தடையாணை வாங்கிய பீட்டா அமைப்பும், அதை வழங்கிய உச்சநீதி மன்றமும், தமிழர்களின் பண்பாட்டிலும் உரிமையிலும் தலையிடுவதாகக் கருதிய இளைஞர்கள் ஆவேசம் அடைந்தனர்.

2017ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகத் திரண்ட கிராமத்தினர் மீது காவல்துறையின் தாக்குதலைக் கண்டித்து, ஒன்று சேர்ந்தது தமிழகத்தின் இளைஞர் படை. அப்பொழுது தொடங்கிய இளைஞர்களின் ஜல்லிக் கட்டுக்கு ஆதரவான போராட்டம், சென்னை மெரினா, மதுரை தமுக்கம் எனத் தமிழகமெங்கும் பரவியதுடன், உலகமெங்கும் தமிழர்கள் வாழுமிடங்களிலும் எழுச்சியை ஏற்படுத்தியது.

தமிழ் மொழியை முன்வைத்துத் தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் உணவு எனத் தமிழறிஞர்கள் பல்லாண்டுகளாகக் குரலெழுப்பியபோது, அதைப் பொருட்படுத்தாமல் இருந்த தமிழக இளைஞர்களின் மனங்களில், ஜல்லிக்கட்டுப் போராட்டம் நடைபெற்ற ஏழு நாட்களும் தமிழ் அடையாளம் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் அடையாள அழிப்பு அரசியலைப் பல்வேறு கோணங்களின் புரிந்துகொண்டுள்ள தமிழக இளைஞர்களின் அண்மைக்கால எழுச்சி, மொழியினால் கட்டமைக்கப் பட்டதாகும். தமிழகத்தில் வேற்று மொழியினரின் ஆதிக்கத்தில் அறுநூறு ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த சூழலில் இருந்து மீண்டெழுந்த தமிழ் மொழி, அண்மைக்காலத்தில் மீண்டும் சிக்கலுக்குள்ளானபோது, ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின்மூலம் தமிழ் நிலவெளியில் தன்னிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

தமிழர் என்ற சொல் உருவாக்கத்தின் பின்புலத்தில் இருக்கிற தமிழ் மொழி, காலந்தோறும் தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் ஆழமாக வினையாற்றிக்கொண்டிருக்கிறது. மொழியை வெறுமனே பேச்சு தொடர்புக் கருவி என்று கருதுகிற பொதுப்புத்திக்கு அப்பால், மொழியினால் கட்டமைக்கப் படுகிற சமூகத்தில் மொழியின் இடம் முக்கியமானது. இன்றைக்குக் கீழடியில் நடைபெற்ற அகழாய்வில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ள தமிழின் முன்னோடியான தமிழி எழுத்துகள், பண்டைத் தமிழரின் எழுத்து மொழியைக்

கி.மு. 4 ஆம் நூற்றாண்டிற்குக் கொண்டு சென்றுள்ளன. சிந்துச் சமவெளி நாகரிகத்துடன் ஒப்பிடுமளவு கீழடியில் தமிழரின் நாகரிகம் செழித்திருந்தது என்ற புதிய கண்டுபிடிப்பு குறித்து உலகமெங்கும் வாழ்கிறதமிழர்கள்பெருமையடைவதற்குக் காரணமாக இருப்பது, தமிழ் மொழி அரசியல்தான்.

**பயன்பட்ட நூல்கள்**

1. தி.சு.நடராசன். தமிழ் அழகியல்: மரபும் கோட்பாடும். சென்னை: என்சிபிஹெச், 2016.
2. ராஜ்கௌதமன். பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும். சென்னை: என்சிபிஹெச், 2018.
3. ஜமாலன். மொழியும் நிலமும். ஈரோடு: புதுமலர் பதிப்பகம், 2003.